**சார்பு நீதிமன்றம், நாங்குநேரி**

**முன்னிலை :- திரு. P.S. ரஷ்கின் ராஜ், B.A., L.L.B.,**

**சார்பு நீதிபதி, நாங்குநேரி**

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 29 ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண்.149/2021**

**(CNR No.TNTL 27-000330-2021)**

மல்லிகா .... வாதி

// எதிர் //

துரை .... பிரதிவாதி

இந்த வழக்கானது, என் முன்பு இறுதியாக 15.07.2026 அன்று விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. V. அருண்குமார் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. ராகவேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது, பிரதிவாதி, வாதி பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதற்காக வாதிக்கு, பிரதிவாதி ரூ.3,00,000/- நஷ்ட ஈடு வழங்கி உத்தரவு பிறப்பிக்கும் படிக்கும்,

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.30 17:49:09 +0530

வழக்கு செலவு தொகையை பிரதிவாதி, வாதிக்கு கொடுக்கும் படிக்கும் கேட்டு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் : -**

வாதியின் குடும்பத்திற்கு சொந்தமான இடமானது பிரதிவாதி பணிபுரிந்து வரும் காவல் நிலையத்திற்கு எதிரே உள்ளது. மேற்படி சொத்து சம்பந்தமாக வாதிக்கும், ராபர்ட் கன்ஸ்ட்ரக்சன் என்ற பெயரில் தொழில் செய்து வரும் செல்லையாண்டி என்ற ராபர்ட் என்பவருக்கும் வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண்.134/2013 நடைபெற்று வந்து, தற்போது சமூகம் நீதிமன்றத்திற்கு அசல் வழக்கு எண்.72/2020 நடைபெற்று, தற்போது மேற்படி வழக்கு தீர்ப்புக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு வாதி பக்கம் சார்பாக தீர்ப்பாக வாய்ப்பு உள்ளதால், மேற்படி செல்லையாண்டி என்ற ராபர்ட், வாதியின் மீது மிகுந்த கோபத்தில் இருந்தார். மேற்படி செல்லையாண்டி என்ற ராபர்ட் என்பவர் வாதியிடம் தகராறு செய்து வந்தார். இந்நிலையில், கடந்த 02.06.2020 ம் தேதியன்று செல்லையாண்டி என்ற ராபர்ட் என்பவரின் தூண்டுதலின் பேரில் அவரிடம் வேலை பார்க்கும் ஆட்களான ஜெயசீலன் என்பவர் ஆட்டோ பெருமாள், பொன்செல்வி, ஆண்டாள், ஆனந்தராஜ், முருகன், ஈசாக்கு, குமார், ஆறுமுகக்கனி ஆகியோர் கூட்டாக வாதியின் வீட்டிற்குள் நுழைந்து, அசிங்கமாக பேசி, அடித்து கீழே தள்ளி, ஆபாசமான வார்த்தைகளால் பேசி, கல்லை தூக்கி எறிந்தும், கம்பை கொண்டு தாக்கினார்கள். இதுகுறித்து வாதி, பிரதிவாதி வேலை பார்த்து வரும் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க சென்றார்.



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.30 17:49:19 +0530

அங்கு வாதி கொடுத்த புகாரினை பிரதிவாதி பெற்றுக் கொள்ளாமல் அங்கிருந்த மற்ற காவலர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் வாதியை பெண் என்றும் பாராமல் அவதூறான வார்த்தைகளால் திட்டி அடித்து துன்புறுத்தி, மாலை 05.30 மணியிலிருந்து தரையில் உட்கார வைத்து பிரதிவாதியும், அவருடன் வேலை பார்த்து வந்த காவல் நிலைய எழுத்தர் மேரி ஸ்டெல்லா பாய் என்பவரும் தரக்குறைவாகவும், அசிங்கமாகவும் பேசினார்கள். மேலும், வாதிக்கு குடிக்க குடிநீர், இரவு சாப்பாடு எதுவும் கொடுக்காமலும், வாதியிடமிருந்த செல்போன், மணிபர்ஸ் ஆகியவற்றை பிடுங்கி வைத்துக்கொண்டு வாதியை எழுந்து கூட நிற்கவிடாமலும், இயற்கை உபாதைகளை கழிக்கக்கூட விடாமலும் மிகவும் கொடுமைப்படுத்தினார்கள். மேலும், பிரதிவாதியும், அவருடன் வேலை பார்த்து வந்த காவல் நிலைய எழுத்தர் மேரி ஸ்டெல்லா பாய் என்பவரும் சேர்ந்து அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து வாதியை துன்புறுத்தினார்கள். அதன்பின்பு செல்லையாண்டி என்ற ராபர்ட் என்பவரிடம் வேலை பார்த்து வரும் ஜெயசீலன் என்பவர் மூலம் ஆட்டோ பெருமாள் மனைவி பொன்செல்வி என்பவரிடம் நடக்காத சம்பவத்திற்கு பொய் புகார் ஒன்றினை வாங்கி வாதி மீது மூலைக்கரைப்பட்டி காவல் நிலைய குற்ற வழக்கு எண்.161/2020 ன் படி இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 294(b), 352, 506(2)-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். பின்னர் 02.06.2020 ம் தேதியன்று இரவு 11.30 மணிக்கு நாங்குநேரி குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்பு ரிமாண்ட் செய்வதற்கு வாதியிடமிருந்தே பணத்தை பிடுங்கி தனியார் வாடகை காரில் அழைத்துச் சென்றார்.



P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.30 17:49:26 +0530

அங்கு வாதியை மிரட்டி நீதிபதியிடம் ஒன்றும் சொல்லக்கூடாது என்றும், நடந்தவற்றை கூறினால் மீண்டும் ஒரு பொய் வழக்கு போட்டு சிறையில் அடைப்போம் என்று பிரதிவாதியும், காவல் நிலைய எழுத்தர் மேரி ஸ்டெல்லா பாய் என்பவரும் மிரட்டியதால் வாதி, நீதிபதியிடம் எதுவும் சொல்லவில்லை. அதன்பின்பு வாதியை 5 நாட்கள் கொக்கிரகுளம் மகளிர் தனிச்சிறையில் அடைத்துவிட்டார்கள். அதுகுறித்து கேள்விப்பட்ட பல நபர்கள் வாதியிடம் பொது இடங்களில் வைத்து, ''நீ சிறைக்கு சென்று வந்தவளா'' என கேட்டார்கள். மேற்படி செயலுக்கு பின்பு வாதி நற்பெயருக்கு பெரும் களங்கம் ஏற்பட்டு அவரது பகுதியில் வெளியே தலை காட்ட முடியாமல் மனம் நொந்து நடைபிணமாக வாழ்ந்து வருகிறார். வாதியின் இந்த நிலைமைக்கு மேற்படி பிரதிவாதியின் செயல்தான் காரணமாகும். அதனால் வாதி அவரது நற்பெயருக்கு ஏற்பட்ட களங்கம் மற்றும் மனஉளைச்சல், மன வேதனை ஆகியவற்றிற்கு இழப்பீடாக பிரதிவாதி ரூ.3,00,000/- மும், மூலைக்கரைப்பட்டி காவல் நிலைய எழுத்தர் அவர்கள் ரூ.2,00,000/-மும் இழப்பீடாக தர வேண்டும் என கேட்டு, வாதி அவரது வழக்கறிஞர் மூலமாக 16.06.2020 அன்று சட்ட அறிவிப்பு அனுப்பினார். அதனை பிரதிவாதி 19.06.2020 அன்று பெற்றுக்கொண்டார். ஆனால் நாளது தேதிவரை மேற்படி அறிவிப்புக்கு பிரதிவாதியோ, மூலைக்கரைப்பட்டி காவல் நிலைய எழுத்தரோ எந்தவித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை. பிரதிவாதி, வாதிக்கு நஷ்ட ஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார். எனவே பிரதிவாதி, வாதிக்கு எதிராக இழைத்த அவதூறு மற்றும் மனவேதனை, மனஉளைச்சல் ஆகியவற்றிற்கு பிரதிவாதி,



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.30 17:49:32 +0530

வாதிக்கு ரூ.3,00,000/- நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென இந்த தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளதாக வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3) <u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u> : -**

வாதியின் பிராது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. வாதி பிராதில் கோரிய பரிகாரம் எதுவும் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல. வாதியின் பிராது பிரதமத்திலேயே தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்றாகும். வாதியின் குடும்பத்திற்கு சொந்தமான இடம் பிரதிவாதி பணிபுரிந்து வரும் காவல் நிலையத்திற்கு எதிரே உள்ளது என்றும், மேற்படி சொத்து சம்பந்தமாக ராபர்ட் கன்ஸ்ட்ரக்சன் என்ற பெயரில் தொழில் செய்து வரும் செல்லையாண்டி என்ற ராபர்ட் என்பவருக்கும் வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தில் வழக்கு எண்.134/2013 நடைபெற்று வந்து தற்பொழுது சமூகம் நீதிமன்றத்திற்கு அசல் வழக்கு எண்.72/2020 நடைபெற்று தீர்ப்புக்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்ற விபரமும் மற்றும் வழக்கு விபரம் குறித்து இந்த பிரதிவாதிக்கு எதுவும் தெரியாது. மேற்படி ராபர்ட் அவருடன் வேலை பார்க்கும் ஜெயசீலன் ஆட்டோ பெருமாள், பொன்செல்வி, ஆண்டாள், ஆனந்தராஜ், முருகன், ஈசாக்கு, குமார், ஆறுமுகக்கனி ஆகியோருக்கும், வாதிக்கும் சண்டை நடந்தது குறித்து சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யாகும். வாதி புகார் கொடுக்க சென்றபோது பிரதிவாதி அவருடன் பணிபுரிந்து வரும் காவல் நிலைய உதவி ஆய்வாளர் துரையுடன் சேர்ந்து கொண்டு வாதியிடம் புகாரை வாங்காமல் வாதி மீது பொய் வழக்கு போட்டு சிறையில் அடைத்துவிடுவேன் என்று மிரட்டியுள்ளார் என்று கூறியுள்ள



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.30 17:49:37 +0530

சங்கதிகளும் பொய்யாகும். வாதி வழக்குரை பாரா 4ல் கூறியுள்ள சங்திகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானதாகும். பிரதிவாதியின் செயலால் வாதிக்கு தாங்க முடியாத மனவேதனையும், மனஉளைச்சலும் ஏற்பட்டது என்று கூறியுள்ளது உண்மையல்ல. மேலும், வாதிக்கு இழப்பீடாக பிரதிவாதி ரூ.2,00,000/-மும், மூலைக்கரைப்பட்டி காவல் நிலைய உதவி ஆய்வாளர் ரூ.3,00,000/-மும் தர வேண்டுமென வாதி அவர் வழக்கறிஞர் மூலமாக 16.06.2020 அன்று அனுப்பியுள்ள சட்ட அறிவிப்பில் கண்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானது என்பதால் அதற்கு பிரதிவாதி எந்தவித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை. பிரதிவாதி, வாதிக்கு எந்தவித நஷ்ட ஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல. வாதி இந்த வழக்கினை தாக்கல் செய்வதற்கு எந்த வழக்கு மூலமும் இல்லை. வாதி கூறியிருக்கும் வழக்கு மூலமும் பொய்யாகும். எனவே வாதியின் பிராதை இந்த பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4)** **<u>வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றின் அடிப்படையில் இவ்வழக்கின் தீர்வுக்காக கீழ்க்கண்டவாறு எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.</u>**

1. Whether the plaintiff is entitled to get the damages from the defendant as prayed for in the plaint ?
2. To what other relief if any the plaintiff is entitled to ?

**5)** வாதி தரப்பில், வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.30 17:49:43 +0530

தரப்பில், பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. ஆனால், வாதி தரப்பில், பிரதிவாதியின் குறுக்கு விசாரணையில், வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

## 6) எழுவினா 1 க்கான தீர்வு

வாதி கோரும் இழப்பீடு பிரதிவாதியிடமிருந்து கிடைக்கத்தக்கதா? முதலாவதாக, தாவா வழக்கில் வாதி, வா.சா.1 ஆக சாட்சியமளித்துள்ளார். அவர் தன்னுடைய நிரூபண வாக்குமூலத்தில், வாதிக்கு சொந்தமான இடமானது பிரதிவாதி பணிபுரிந்து வரும் காவல் நிலையத்திற்கு அருகாமையில் உள்ளது. மேற்படி சொத்து சம்பந்தமாக, ராபர்ட் கன்ஸ்ட்ரக்சன் என்ற பெயரில் தொழில் நடத்தி வரும் செல்லப்பாண்டி என்ற ராபர்ட்-க்கும், வாதிக்கும் வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.134/2013 என்ற வழக்கு நடைபெற்று வாதிக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது. இதனால் செல்லப்பாண்டி என்ற ராபர்ட் என்பவர் வாதியின் மீது கோபம் கொண்டிருந்தார். வாதியிடம் வீண்வம்பு செய்தார். இதனால் பிரதிவாதி பணிபுரியும் காவல் நிலையத்தில் செல்லப்பாண்டி என்ற ராபர்ட் மீது வாதி புகார் கொடுக்க சென்றபோது பிரதிவாதி, வாதியை மிரட்டி தரக்குறைவாக பேசி, செல்லப்பாண்டி என்ற ராபர்ட் கொடுத்த பொய் புகாருக்கு வாதியின் மீது வழக்கு பதிவு செய்து, வாதியை பெண் என்றும் பாராமல் 02.06.2020 அன்று இரவு 11.30 மணிக்கு நாங்குநேரி நீதித்துறை நடுவர் முன்பு நீதிமன்ற காவலுக்கு அனுப்பியும், வாதி 5 நாட்கள் நீதிமன்ற காவலில் இருந்து மனஉளைச்சலில் இருந்தார். இதனால்



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.30 17:49:48 +0530

வாதியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டது. வாதிக்கு ஏற்பட்ட மனஉளைச்சல், அவரது பெயருக்கு ஏற்பட்ட களங்கத்திற்கு ரூ.3,00,000/- இந்த பிரதிவாதி, வாதிக்கு இழப்பீடாக செலுத்த வேண்டும் என்பதாகும்.

7) அடுத்ததாக, வாதியின் வழக்குரையை பரிசீலனை செய்யும்போது, பிரதிவாதி மூலைக்கரைப்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது நடந்த சம்பவம் ஆகும். ஆகவே பிரதிவாதி அரசு பணியில் இருக்கும்போது தன்னுடைய பதவியை தவறாக பயன்படுத்தி இருந்தால், வாதி இதுசம்பந்தமாக பிரதிவாதி பணிபுரியும் காவல் நிலையத்தின் மேலதிகாரியான காவல் ஆய்வாளர், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்ப வேண்டும். மேலும், அதை மாவட்ட ஆட்சியருக்கு தெரியப்படுத்த வேண்டும். பிரதிவாதி அரசு பணியில் இருக்கும்போது, இந்த வழக்கு சம்பவம் நடந்திருந்தால், பிரதிவாதி, அவர் பணிபுரியும் காவல் நிலையத்தின் மேலதிகாரியான காவல் ஆய்வாளர், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 80ன் கீழ் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருக்க வேண்டும். ஆகவே, வாதியின் வழக்கு முறைப்படி அவசிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் பாதிப்பு அடைந்துள்ளது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.30 17:49:53 +0530

**8)** அடுத்ததாக, பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை பரிசீலனை செய்யும் போது, வாதியை மிரட்டவில்லை. பெருமாள் என்பவரின் மனைவி பொன்செல்வி என்பவர் கொடுத்த புகாருக்கு வாதியின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. எந்த அதிகார துஷ்பிரயோகமும் செய்யப்படவில்லை. இதனால் வாதிக்கு ஏற்பட்ட மனஉளைச்சலுக்கு இந்த பிரதிவாதி பொறுப்பு ஏற்க முடியாது என்பதாகும். இதுசம்பந்தமாக, வாதியை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது, வா.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியமானது, **"பிரதிவாதி நடந்து கொண்டது சம்பந்தமாக அவர் மீது உயர் அதிகாரிகளான காவல் ஆய்வாளர், துணை கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட கண்காணிப்பாளர் ஆகியோர்களிடம் புகார் கொடுத்தேனா என்றால் SP அலுவலகத்தில் கொடுத்தேன். அதன் கைநகல் உள்ளே கொடுத்திருப்பேன். எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 8 அல்லது 9ம் தேதி கொடுத்திருப்பேன். அந்த மனு மீது ஏதேனும் விசாரணை நடைபெற்றதா என்றால் விசாரணை நடைபெறவில்லை."** என சாட்சியமளித்துள்ளார். மேற்படி வா.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தினை பார்க்கும் போது, பிரதிவாதிக்கு எதிராக மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்ததாக கூறியுள்ளார். வா.சா.ஆ.8 ஐ பரிசீலனை செய்யும் போது, வாதி, பிரதிவாதி உட்பட 12 நபர்களுக்கு எதிராக காவல் ஆய்வாளர், நாங்குநேரி சரகம் அவர்களுக்கு பதிவு தபாலில் புகார் அனுப்பியுள்ளார். மேற்படி புகார் கொடுத்ததோடு வாதியின் கடமை முடிந்ததாக கருத முடியாது. வாதி,



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.30 17:49:58 +0530

இந்த பிரதிவாதி மீது இழப்பீடு கோர பிரதிவாதி மற்றும் பிரதிவாதியின் உயர் அதிகாரிகளுக்கு உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 80-ன் கீழ் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்ப வேண்டும். வாதிக்கு எதிராக கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, சட்டத்திற்கு புறம்பாக வாதியை சிறையில் உட்படுத்தினார் என்பதை வாதி தெளிவுபடுத்த வேண்டும். வாதிக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.161/2020 வழக்கு என்ன ஆனது? மேற்படி வழக்கிலிருந்து வாதி நிரபராதி என விடுதலை செய்யப்பட்டாரா? என்பதை பொறுத்து வாதி தெளிவுபடுத்தவில்லை. வாதியின் வழக்கறிஞர் 16.06.2020 அன்று பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு வா.சா.ஆ.3 ஆகும். மேற்படி வா.சா.ஆ.3 சட்ட அறிவிப்பை பரிசீலனை செய்யும்போது, உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 80 ன் கீழ் இந்த அறிவிப்பு அனுப்பவில்லை. மாறாக, பிரதிவாதியின் தனிப்பட்ட முகவரிக்குதான் மேற்படி அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, பிரதிவாதி அரசு பணியில் இருக்கும்போது, வாதியின் மீது கொடுத்த புகாருக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டு வாதி சிறையில் அடைக்கப்பட்டார் என்ற காரணத்திற்காக பிரதிவாதி அதிகாரத்தை மீறியுள்ளார் என தீர்மானிக்க முடியுமா? என பார்க்கும் போது, வாதிக்கும், செல்லப்பாண்டி என்ற ராபர்ட்-க்கும் ஏற்கனவே சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்துள்ளது. ஆனால் செல்லப்பாண்டி என்ற ராபர்ட் என்பவர் வாதிக்கு எதிராக எந்த புகாரும் கொடுக்கவில்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.30 17:50:04 +0530

**9)** அடுத்ததாக, வா.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.161/2020 ஐ பரிசீலனை செய்யும்போது, வாதியின் மீது பொன்செல்வி என்பவர் 02.06.2020 ல் புகார் கொடுத்துள்ளார். மேற்படி வழக்கில் இந்த வாதிக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றம் பிணையில் விடக்கூடாத குற்றமாகும். ஆகவே, பிரதிவாதி தன்னுடைய கடமையில் இருந்து மீறியுள்ளாரா? என பார்க்கும் போது, தாவா வழக்கில் பிரதிவாதி, பி.சா.1 ஆக சாட்சியமளித்துள்ளார். அவர் தன்னுடைய நிரூபண வாக்குமூலத்தில், வாதிக்கும், செல்லப்பாண்டி என்ற ராபர்ட்-க்கும், வள்ளியூர் சார்பு நீதிமன்றத்தில் சிவில் வழக்கு நடைபெற்றது தெரியாது. 02.06.2020 ம் தேதியில் வாதி எந்த புகாரும் கொடுக்க மூலைக்கரைப்பட்டி காவல் நிலையத்தில் ஆஜராகவில்லை. 02.06.2020 அன்று பெருமாள் என்பவரின் மனைவி பொன்செல்வி என்பவர்தான் வாதி மீது புகார் கொடுத்தார். மேற்படி புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி குற்றவாளி கைது செய்யப்பட்டு இருக்கிறார் என்பதாகும். இந்நிலையில், பி.சா.1 ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தினை கவனத்தில் கொள்ளும்போது, 13.03.2020 ல் வாதி கொடுத்த புகாருக்கு குற்ற எண்.33/2020, பிரிவுகள் 147, 148, 294(b), 506(i) r/w.4 of Women Harrasment Act-ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால், மேற்படி வழக்கில் எதிரிகள் கைது செய்யப்படவில்லை. அதன்பிறகு 02.06.2020 ல் வாதியின் மீது கொடுக்கப்பட்ட புகாருக்கு குற்ற எண்.161/2020, பிரிவுகள் 294(b), 352, 506(ii) இ.த.ச.-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, வாதி கைது செய்யப்பட்டு, நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளார். ஆகவே, வாதி



P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.30 17:50:10 +0530

கொடுத்த புகாருக்கும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வாதி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார் என்ற காரணத்திற்காக இந்த பிரதிவாதி தன்னுடைய அதிகாரத்தை மீறியுள்ளார் என கருத முடியாது. பிரதிவாதி சட்டத்திற்கு புறம்பான நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாக வாதி தரப்பு ஆவணங்கள் தெளிவுபடுத்தவில்லை. ஆகவே வாதி கோரும் இழப்பீடு வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 1க்கு வாதிக்கு எதிராகவே இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

**10)** <u>**எழுவினா 2 ற்கான தீர்வு**</u>

இவ்வழக்கின் தன்மையை பார்க்கும்பொழுது, தரப்பினர்கள் அவரவர் செலவுத்தொகையை அவரவரே ஏற்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

**11)** முடிவாக, வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 29 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.30 17:50:37 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி.

1) **<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>** :-

வா.சா.1 - மல்லிகா

2) **<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>** :-

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 02.06.2020 | வாதி, மூலைக்கரைப்பட்டி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு நகல் |
| வா.சா.ஆ.2 | --- | வாதி மீது பிரதிவாதி பொய்யாக பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை எண்.161/2020 (கணினி பதிவிறக்க நகல்) |
| வா.சா.ஆ.3 | 16.06.2020 | வாதி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு (அலுவலக நகல்) |
| வா.சா.ஆ.4 | --- | அஞ்சலக ரசீது |
| வா.சா.ஆ.5 | 19.06.2020 | பிரதிவாதி அறிவிப்பினை பெற்றுக் கொண்டததை காட்டக்கூடிய அஞ்சலக ஒப்புதல் அட்டை |
| வா.சா.ஆ.6 | --- | அசல் வழக்கு எண்.72/2020 வழக்கின் தீர்ப்புரை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.7 | --- | அசல் வழக்கு எண்.72/2020 வழக்கின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.8 | --- | வாதி, ஸ்டெல்லா மேரி உட்பட 12 நபர்கள் மீது காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகார் (அலுவலக நகல்) |
| வா.சா.ஆ.9 | --- | நான்குநேரி காவல் ஆய்வாளரால் நாங்குநேரி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிய கடிதம் |

3) **<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்</u>** :-

பி.சா.1 - துரை

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.30 17:50:43 +0530

**4) <u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :- இல்லை**

**5) <u>சாட்சி தரப்பு சான்றாவணங்கள்</u> :- இல்லை**

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.07.30 17:50:50 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி.

சார்பு நீதிமன்றம்,

நாங்குநேரி

அ.வ.எண்.149/2021

நேரிய/வரைவு தீர்ப்புரை

நாள் - 29.07.2026